தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, ஐப்பசி 12, திருவள்ளுவர் ஆண்டு–2044

2013 அக்டோபர் 29, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து.”

நோய் இல்லாமல் இருத்தல், சிறந்த செல்வம், விளைபொருள் வளம், இன்பமயமான வாழ்க்கை, நல்ல பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டிற்கு அணிகலன்களாக விளங்குவன.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

46—

துணை மின் நிலையம்

***17143—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஊராட்சி ஒன்றியம், புன்னை கிராமத்திலுள்ள 33/11 கி.வோ. திறன் கொண்ட துணை

மின் நிலையத்தை 110/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், புன்னை கிராமத்தில் இயங்கி வரும் 33/11 கிலோவோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையத்தை 110/11 கிலோவோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த 12-வது திட்டக் காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப சாத்தியக் கூறுகள் இருக்கும் பட்சத்தில், விரைவில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு புன்னை கிராமத்தில் 33/11 கிலோவோல்ட் துணை மின் நிலையம் 110/11 கிலோவோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமாவாசை முடிந்தவுடன் பௌர்ணமி வருவதில்லை. அமாவாசையின் நிழல் அம்மாவின் ஆட்சியில் ஆரம்பத்தில் படிந்ததாலேயே அவ்வப்போது ஆங்காங்கே இருள் சூழ்ந்தது. இதைக் கண்டு தமிழகத்திற்கு இருண்ட காலம் வந்துவிட்டது என்று முதலைக் கண்ணீர் விட்டோரின் முகத்திரையை கிழித்து இன்று மின்சாரத்தின் தன்னிறைவால் தமிழகமே தகதகவென ஒளிவெள்ளத்தில் மிதக்கிறது, விரைவில் தமிழகத்தை மின்சார மிகுமாநிலமாக உருவாக்கிட தொலைநோக்கு மின் திட்டங்களைக் கொண்டு வந்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது அரக்கோணம் தொகுதியில் உள்ள 33/11 கிலோவோல்ட் திறன் கொண்ட புன்னை துணை மின் நிலையத்தை 110/11 கிலோவோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நல்ல பதிலை வழங்கிய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா*

2013 அக்டோபர் 29]

அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர், முத்துப்பேட்டை ஆகிய இரண்டு இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை எல்லாம் ஆய்வு செய்தார்கள். ஆனால் இன்றுவரை அந்தப் பணி நடைபெறாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோட்டூர், முத்துப்பேட்டை ஆகிய இரண்டு இடங்களில் துணை மின் நிலையம் அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டூர் மற்றும் முத்துப்பேட்டை பகுதிகளில் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு ஆய்வு செய்யும். ஆய்வில் அங்கே இருக்கின்ற மின் பளுவின் தேவைக்கேற்ப புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று சாதகமான முடிவு கிடைத்தால் மட்டுமே அங்கே துணை மின் நிலையம் அமைக்க முடியும். இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அந்த இரண்டு இடங்களிலும் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு வேண்டிய சாத்தியக் கூறுகளை விரைவில் ஆராய்ந்து, தேவையேற்படின், அதற்குரிய நடவடிக்கையை நிச்சயமாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடந்தை தொகுதியில், சாக்கோட்டை ஊராட்சியில் 110/11 கிலோவோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் 50 வருடங்களாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனை 230/11 கிலோவோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் இயங்கி வருகின்ற 110/11 கிலோவோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையத்தை, 230/11 கிலோவோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அங்கே ஏற்படுகின்ற மின்பளுவை ஆய்வுசெய்து தேவை ஏற்படின் அந்தத் துணை மின் நிலையத்தை 230/11 கிலோவோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியத்தில், தாழம்பட்டி என்ற கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க இடம் தேர்வுசெய்யப்பட்டு ஆய்வறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பண்ருட்டி ஒன்றியத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்கின்ற பணிகள் நடைபெறுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இடம் தேர்வு செய்கின்ற பணிகள் நடைபெற்றாலே, அங்கே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுவிட்டது என்றுதான் பொருள். ஆகவே, அங்கே, துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகளை விரைவுபடுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

47—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

***7696—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சிக்கு ரூ.45.60 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான சுத்திகரிப்பு நிலையம் மற்றும்

TRUTH ALONE TRIUMPHS